A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 81 / 2023</u>**

**<u>By RPAD</u>**

திருமதி D. ஹேமலதா,
AP. 201, 10வது தெரு, 2வது செக்டர்,
கே.கே. நகர், சென்னை – 600 078.

……..மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு L. மணிவண்ணன்)

எதிர்

1. மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

2. உதவி மின்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர்/கிழக்கு,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV SS, 50, ராமசாமி சாலை,
கே.கே. நகர், சென்னை – 78.

3. செயற்பொறியாளர் /இ&ப/ கே.கே.நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு T. பிரவீன் குமார், உதவி மின்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர்/கிழக்கு
திரு T. வேல்முருகன், செயற்பொறியாளர் /இ&ப/ கே.கே.நகர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 06–11–2023</u>**

**<u>கேட்புரை நாள்: 10–01–2024</u>**

**<u>ஆணை நாள்: 19–01–2024</u>**

06.11.2023 அன்று பெறப்பட்ட திருமதி D. ஹேமலதா, AP. 201, 10வது தெரு, 2வது செக்டர், கே.கே. நகர், சென்னை – 600 078 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 81/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.01.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள கட்டிடத்தில் மூன்றாவது தளத்திற்கு வீதப்பட்டி IA மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் கட்டிடத்தில் மூன்றாவது தளத்திற்கு வீதப்பட்டி IA மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் இடத்தை களஆய்வு செய்த போது தரைதளம், முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் மின் இணைப்பு உள்ள நிலையில் completion certification சமர்ப்பித்து மூன்றாம் தளத்தில் மின் இணைப்பு பெற்று கொள்ளுமாறு மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–1, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 04.07.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–1, 19.08.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–I, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 19.08.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மேலே கண்டுள்ள மன்றத்தின் கண்டுபிடிப்புகளின் படி தலைமை பொறியாளர்/வணிகவியல் அறிவுறுத்தலின் படி தரை தளம் மற்றும் மூன்று தளம் உள்ள கட்டிடங்களுக்கு மின் இணைப்பு பெற Planning Permit மற்றும் Completion Certificate சமர்ப்பிக்க வேண்டும். ஆகவே ஏற்கனவே தரை தளம் மற்றும் 2 தளங்கள் உள்ள கட்டிடத்தில் உள்ள மூன்றாம் தளத்திற்கு மின் இணைப்பு பெற Planning Permit மற்றும் Completion Certificate சமர்ப்பிக்க மனுதாரரை இம்மன்றம் அறிவுறுத்துகிறது.*
>
> *TNERC Tariff Order dated 09.09.2022 ன் படி பொது உபயோக மின் இணைப்பு விகிதப்பட்டி 1Dயில் வருவதால் மனுதாரர் பொது உபயோக மின் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் விகிதப்பட்டி 1Dயில் புதிய மின் இணைப்பிற்கு விண்ணப்பிக்குமாறு மனுதாரரை இம்மன்றம் அறிவுறுத்துகிறது.*
>
> *இம்மனு இத்துடன் முடித்து வைக்கப்பட்டது."*

## 4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 10.01.2024 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு L. மணிவண்ணன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு T. பிரவீன் குமார், உதவி மின்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர்/கிழக்கு மற்றும் திரு T. வேல்முருகன், செயற்பொறியாளர் /இ&ப/ கே.கே.நகர், சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1, ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள்

முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மேற்படி விலாசத்தில் கட்டப்பட்ட அனைத்து தளத்திற்கும் மாநகராட்சியால் ஆய்வு செய்யப்பட்டு கட்டிடம் முடிவதற்கும் அரை ஆண்டுகளாக ரூ.10,800/– மற்றும் கழிவு நீர்வரியாக ரூ.3048/– ஆகவும் ஆண்டு வரியாக ரூ.27,696/– செலுத்தி வரும் பட்சத்தில் 3ம் தளத்தில் கட்டப்பட்ட பகுதிக்கு உபயோகப்படுத்தும் மின்சாரத்தை கணக்கீடு செய்வதற்காக தனி மீட்டர் வழங்குவது குறித்து கேட்பது தவறா எனவும், ஏன் மறுப்பதற்கான சரியான காரணம் தெரிவிக்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் வினவியுள்ளார்.

5.2 கே.கே. நகரில் 15 to 17 அடுக்குமாடி கட்டிடங்கள் குடியிருப்பிற்காக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு மின் மீட்டர் வழங்கும்போது தனக்கு ஏன் மறுக்கப்படுகிறது எனவும், Director (Distribution) TANGEDCO /CE/COMML/SE/மணை/EE3/AEE/2/F.RP Per/D.139/ 2020 dt. 04.07.20 கடிதத்தின் பாரா 6(A)யும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும், மேலும் அரசு கடிதங்களில் Completion Certificate தேவையில்லை என்ற கருத்தினை தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் த.நா.வீ.வ.கழகத்தால் வழங்கப்பட்ட 22 x 80 எல்லோரையும் போல 2400 சதுரடிகள் மட்டுமே கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 பின்னர் பல இடங்களில் அரசு விதியினை தளர்த்தியுள்ளது எனவும், மேலும் தன்னால் 3 வது தளத்தில் எவ்வளவு மின்சாரம் தான் உபயோகப்படுத்துகிறாரோ அதனை கணக்கீடு செய்வதற்கு அதற்கு கட்டணம் செலுத்த தயாராக இருக்கும் பட்சத்தில், இலவசமில்லா மின்சாரம் வழங்க மின் மீட்டர் அமைத்து தருமாறு கோருவது தவறா எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தான் தவறாமல் அரையாண்டு வரியும் செலுத்தி வருவதால் தனக்கு முழு உரிமையுள்ளதால் தனது கோரிக்கை மீண்டும் பரிசீலனை செய்து இலவசமில்லாத மின்சாரம் வழங்கவும் அதற்கு தனி மீட்டர் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 எதிர்மனுதாரரின் வாதங்கள்:

6.1 எண் 201, 10 வது தெரு, 2 வது செக்டர் கே.கே.நகர், சென்னை 600078 என்கின்ற முகவரியில் உள்ள கட்டிடத்தில் மூன்றாவது தளத்திற்கு மின் இணைப்பு கோரி மனுதாரர் திருமதி ஹேமலதா மனு அளித்ததாகவும், மேற்கண்ட முகவரியில் தரை தளத்தில் ஒரு குடியிருப்பும் முதல் மற்றும் இரண்டாவது தளத்தில் Duplex வீடாகவும் மூன்றாவது தளத்தில் ஒரு குடியிருப்பும் கட்டப்பட்டுள்ளது என்றும், அக்கட்டிடத்தின் தரைதளத்தில் மின் இணைப்பு எண் 229–002–69ம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு (Duplex house) மின் இணைப்பு எண் 229–002–1035 ம் என இரண்டு மின் இணைப்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் மேலும் மேற்படி கட்டிடத்திற்கு பொது பயன்பாட்டிற்காக ஒரு மின் இணைப்பு எண் 229–002–1090 ம் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி கட்டிடத்திற்கு பொது பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்ட மின் இணைப்பு எண் 229–002–1090 ஆனது Tariff 1A ல் இருந்து Tariff 1D கடந்த 10.09.2022 அன்று விகிதமாற்றம் செய்யப்பட்டு அம்மின் இணைப்பு பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் மேலும் பொது பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்ட அம்மின் இணைப்பு எண்.229–002–1090 ஆனது மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில் 13.01.2023 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டு மீட்டர் அகற்றப்பட்டதாகவும், தற்சமயம் மனுதாரர் அக்கட்டிடத்தில் மூன்றாவது தளத்திற்கு Tariff 1A ல் மின் இணைப்பு கோரி நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் 04.07.2023 அன்று மனு அளித்ததாகவும், அதன் அடிப்படையில் உதவி பொறியாளர் இ&ப/க.க நகர் கிழக்கு அவர்கள் மனுதாரருக்கு கடந்த 25.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மூன்றாம் தளத்தில் அமைந்துள்ள குடியிருப்பிற்கு விதிகளின் படி மின் இணைப்பு வழங்க இயலாது என தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அதனை தொடர்ந்து சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–1 நுகர்வோர் குறைதீர்வு மன்றத்தில் 27.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் திருமதி ஹேமலதா அவர்களுக்கு தலைமை பொறியாளர் வணிகவியல் அறிவுறுத்தலின் படி தரை தளம் மற்றும் மூன்று தளம் உள்ள கட்டிடத்திற்கு மின் இணைப்பு பெற Planning

Permit, Completion Certificate சமர்பிக்க வேண்டும் எனவும், ஏற்கனவே தரை தளம் மற்றும் மூன்று தளம் உள்ள கட்டிடத்தில் உள்ள மூன்றாவது தளத்தில் மின் இணைப்பு பெற Planning Permit, Completion Certificate சமர்பிக்க மனுதாரருக்கு மன்றம் அறிவுறுத்தியதாகவும், மேலும் TNERC Tariff order date 09.09.2022 ன் படி பொது உபயோக மின் இணைப்பு Tariff 1D ல் வருவதால் மனுதாரர் பொது உபயோக மின் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் Tariff 1D புதிய மின் இணைப்பிற்கு விண்ணப்பிக்குமாறு மனுதாரருக்கு மன்றம் அறிவுறுத்தியதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 Tamilnadu Combined Development and Building Rules 2019 விதி எண் 20ன் படி மூன்று குடியிருப்புக்கு மேல், 750 சதுர மீட்டருக்கு மேல், 12 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு வீட்டு உபயோக மின் இணைப்பு வழங்குவதற்கு கட்டிட வரைபட அனுமதி மற்றும் கட்டிட நிறைவு சான்றிதழ் சமர்பிக்கப்பட வேண்டும் எனவும், மனுதாரர் மின் இணைப்பு கோரும் கட்டிடம் தரைதளம், முதல், இரண்டு, மற்றும் மூன்று தளங்கள் உள்ள கட்டிடம் எனவும், மேலும் மேல்முறையீட்டாளர் மனு மூலம் மட்டுமே மின் இணைப்பு வேண்டி கோரிக்கை விடுத்துள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் கட்டிட வரைபட அனுமதி மற்றும் கட்டிட நிறைவு சான்றிதழுடன் இணையதளம் வாயிலாக மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் மனுதாரர் கோரிய மூன்றாம் தளத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி D. ஹேமலதா, AP. 201, 10வது தெரு, 2வது செக்டர், கே.கே. நகர், சென்னை – 600 078 என்கிற முகவரியில் வசித்து வருவதாகவும், அவ்விடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தின் மூன்றாவது தளத்திற்கு வீட்டு உபயோக மின் இணைப்பு வீதப்பட்டி IA வேண்டி விண்ணப்பித்துள்ளார். மேற்படி விலாசத்தில் கட்டப்பட்ட அனைத்து தளத்திற்கும் மாநகராட்சியால் ஆய்வு செய்யப்பட்டு ஆண்டு வரியாக ரூ.27,696/– செலுத்தி வரும் பட்சத்தில் 3ம் தளத்தில் கட்டப்பட்ட பகுதிக்கு

உபயோகப்படுத்தும் மின்சாரத்தை கணக்கீடு செய்வதற்கு தனி மீட்டர் வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் பேரில் மேற்கண்ட முகவரியில் எதிர்மனுதாரர் ஆய்வு மேற்கொண்ட போது ஏற்கனவே அந்த முகவரியில் தரை தளத்தில் ஒரு குடியிருப்பும் முதல் மற்றும் இரண்டாவது தளத்தில் Duplex வீடாகவும் மூன்றாவது தளத்தில் ஒரு குடியிருப்பும் கட்டப்பட்டுள்ளது என்றும், அக்கட்டிடத்தின் தரைதளத்தில் மின் இணைப்பு எண் 229-002-69ம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு (Duplex house) மின் இணைப்பு எண் 229-002-1035 ம் என இரண்டு மின் இணைப்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் மேலும் மேற்படி கட்டிடத்திற்கு பொது பயன்பாட்டிற்காக ஒரு மின் இணைப்பு எண் 229-002-1090 ம் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 Tamilnadu Combined Development and Building Rules 2019 விதி எண் 20ன் படி மூன்று குடியிருப்புக்கு மேல், 750 சதுர மீட்டருக்கு மேல், 12 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு வீட்டு உபயோக மின் இணைப்பு வழங்குவதற்கு கட்டிட வரைபட அனுமதி மற்றும் கட்டிட நிறைவு சான்றிதழ் சமர்பிக்கப்பட வேண்டும் எனவும், மனுதாரர் மின் இணைப்பு கோரும் கட்டிடம் தரைதளம், முதல், இரண்டு, மற்றும் மூன்று தளங்கள் உள்ள கட்டிடம் எனவும், மேலும் மேல்முறையீட்டாளர் மனு மூலம் மட்டுமே மின் இணைப்பு வேண்டி கோரிக்கை விடுத்துள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் கட்டிட வரைபட அனுமதி மற்றும் கட்டிட நிறைவு சான்றிதழுடன் இணையதளம் வாயிலாக மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் மனுதாரர் கோரிய மூன்றாம் தளத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேலும், எதிர்மனுதாரர் தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறை Memo No. CE/ COMML/ SE/ COMML/ EE3 /AEE2 /F. Plg. Per/ D-139 / 2020, Dt. 04.07.2020-இன்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடம் மூன்று குடியிருப்புகளுக்கு மேல் உள்ளதால் அக்கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்க கட்டிட பணி நிறைவு சான்றிதழ் அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளர், தான் மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் கட்டிடமானது 2019–க்கு முன்னதாகவே கட்டப்பட்ட கட்டிடம் என்றும், எனவே கட்டிட பணி நிறைவு சான்றிதழ் அவசியம் இல்லை என்றும் தெரிவித்து அதற்குரிய வரி ரசீதுகளையும் சமர்ப்பித்துள்ளார் எனவும், திட்ட அனுமதி (Planning Permit) ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

1. விண்ணப்பதாரருக்கு புதிய மின் இணைப்பு வழங்கப்படும் நேர்வில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார பகிர்மான விதிதொகுப்பில் கூறப்பட்டுள்ளது யாவை?

2. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்(CMDA) வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் மின் இணைப்பு வழங்குவதற்காக வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் என்ன?

3. தமிழ்நாடு மின்சார பகிர்மான விதிதொகுப்பில் கூறப்பட்டுள்ள பிற இணங்குகளின்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடத்தின் மூன்றாவது தளத்தில் மின் இணைப்பு வழங்க வழிவகை உள்ளதா?

## 8.0 <u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு:</u>

8.1 ஒரு புதிய மின்னிணைப்பு வழங்குவது சம்பந்தமாக விளக்கம் பெற தமிழ்நாடு பகிர்மான விதி எண்.27–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதியின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

*"27. Requisitions for Supply of Energy:*

(1) *The provision regarding the duty of Licensee as detailed in section 43 of the Act to supply electricity on request is reproduced below:*

> *"(1) Save as otherwise provided in this Act, every distribution licensee, shall, on an application by the owner or occupier of any premises, give supply of electricity to such premises, within one month after receipt of the application requiring such supply:*

*Provided that where supply requires extension of distribution mains, or Commissioning of new sub-stations, the distribution licensee shall supply the electricity to such premises immediately after such extension or Commissioning or within such period as may be specified by the Appropriate Commission.*

*Provided further that in case of a village or hamlet or area wherein no provision for supply of electricity exists, the Appropriate Commission may extend the said period as it may consider necessary for electrification of such village or hamlet or area.*

*Provided that the licensee will refuse to supply electricity to an intending consumer who had defaulted payment of dues to the licensee in respect of any other service connection in his name.*

*Explanation:- For the purposes of this sub-section, "application" means the application complete in all respects in the appropriate form, as required by the distribution licensee, along with documents showing payment of necessary charges and **other compliances**."*

****

*11) The requirement to be notified by the Authority through regulations shall be complied with for availing Service connections.*
*****

***Explanation:-** For removal of doubts, it is hereby declared that the expression "other compliances" occurring in the Explanation to section 43(1) of the Act as reproduced in sub-regulation (1) shall mean the documents mentioned in the Forms specified in ANNEXURE III to this Code and any decree or order or judgment of Courts."*

8.2 மேற்கண்ட பத்திகளில் உள்ள பொருள் விளக்கத்தின்படி ஒரு விண்ணப்பம் என்பது அவசியமான கட்டணச் செலுத்துகையை மற்றும் பிற இணங்குகைகளைக் காட்டுகிற (other compliances) ஆவணங்களுடன் சேர்த்து பகிர்மான உரிமதாரரால் வேண்டுறுத்தப்படுகிறவாறு உரிய படிவத்திலுள்ளதும் அனைத்து வகைகளிலும் நிறைவான விண்ணப்பம் (application complete in all respects) எனப் பொருள்படும். மேலும் விதி எண்.11–ல் உள்ள விளக்கத்தின்படி ஐயங்களை அகற்றும் பொருட்டு (1)–ம் உள்–ஒழுங்குமுறை விதியில் மறு ஆக்கம் செய்யப்பட்டுள்ள சட்டத்தின் 43(1)–ஆம் பிரிவுக்குரிய விளக்கத்தில் வரும் " பிற இணங்குகைகள்" என்ற வாசகத்தின் பொருள் என்னவென்றால், இந்த விதித்தொகுப்பில் இணைப்பு III–இல் உள்ள படிவங்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்பு அல்லது உத்தரவு அல்லது ஆணைகளாகும் என தெரிய வருகிறது.

9.0 <u>**வழக்கெழு வினா 2–ற்கான தீர்வு:**</u>

9.1 இவ்வழக்கில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் பேரில் களஆய்வு செய்ததில் அக்கட்டிடம் தரைதளம், முதல், இரண்டு, மற்றும் மூன்று தளங்கள் உள்ள கட்டிடம் எனவும், அக்கட்டிடத்திற்கு மின்னிணைப்பு வழங்க மாநகராட்சியில் கட்டிடம் முடிக்கப்பட்ட சான்று அவசியம் என கோரியுள்ளார். எனவே, இதுசம்பந்தமாக

தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின்படி சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், அடுக்குமாடி கட்டிடம் மற்றும் சிறப்பு கட்டிடம் ஆகியவற்றிற்கு நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட வரையறையை ஏற்றுக்கொண்டு வழங்கிய அரசாணை G.O.MS No.139, dt.15.10.2007–இன் அடிப்படையில் ஏற்கனவே மின்குறைதீர்ப்பாளர் மேல்முறையீட்டு மனு எண் 99/2015–இல் ஆராயப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"Para 12.22 In the light of the above, I am of the considered opinion that the specifications for Multi storeyed buildings and Special Buildings to be followed by the Chennai Metropolitan Water Supply and Sewerage Board effecting fresh sewer or water connections should be strictly in accordance with the categorization as contained in paragraph-32 (iv) and (v) of the judgement rendered in W.P.No.18898/2000 and batch dated 23.8.2006."*
>
> *4) In view of the above position, the Managing Director, Chennai Metropolitan Water Supply and Sewerage Board has requested to issue necessary amendments to G.O (Ms) No.152, MAWS Department, dt.13.12.2006 for registering, sanctioning and effecting water/sewer connections by CMWSSB as follows:*
>
> *1) To insist the completion certificate from the Competent Authority i.e. Corporation of Chennai CMDA for Special Buildings and Multi storeyed Buildings and*
>
> *2) For all other Buildings to register and sanction the water/sewer applications on the basis of production of sanctioned plan approved by the Corporation of Chennai or CMDA or Assessment of the property by the corporation of Chennai before sanctioning and effecting water sewer connections.*
>
> *Special Buildings and Multi-storeyed Buildings are defined as below:*
> *Special Building means: Buildings with ground floor plus three floors (Total four floors),*
> *Multi-storeyed Buildings means: Buildings with more than four floors,*
>
> *5. The Government have examined the above proposal of the Managing Director, Chennai Metropolitan Water Supply and Sewerage Board, and decided to follow the opinion offered by the Advocate General in para 3 above, The Government accordingly direct the Managing Director, Chennai Metropolitan Water Supply and Sewerage Board, to follow the procedure laid down below while providing sewer / water connections to the newly constructed buildings:-*
>
> *(i) To insist the completion certificate from the Competent Authority i,e, Corporation of Chennai / CMDA for multi- storeyed buildings and special buildings; and*
>
> *(ii) For all other buildings to register and sanction the the water/sewer applications on the basis of production of sanctioned plan approved by the corporation of Chennai or CMDA or Assessment of the property by the Corporation of Chennai before sanctioning and effecting water sewer connections.*
>
> *Special Buildings and Multi-storeyed Buildings are defined as below :*

*Special Building means : Building with Ground floor plus three floors (total four floors)*

*Multistoreyed Building means : Building with more than four floors. "*

*12.24 As per my findings in first issue, insisting of the completion certificate is in line with the explanation given under 27(16) of the Distribution Code. The explanation given under Regulation 27(16) is extracted below:*

*27. Requisitions for Supply of Energy:*
*Xxx xxxx xxxx*
*Xx xxx xxxxx*

*(16) In case of non compliance by the Licensee, of the provisions as above, the intending consumer can approach the Consumer Grievance Redressal Forum 2 established under section 42(5) of the Electricity Act 2003.*

*Explanation:- For the removal of doubts, it is hereby declared that the expression "other compliances" occurring in the Explanation to section 43(1) of the Act as reproduced in sub-regulation (1) shall mean the documents mentioned in the Forms specified in ANNEXURE III to this Code and any decree or order or judgment of Courts."*

*12.25 On a careful reading of the Explanation, it is understood that the expression other compliances shall mean the documents specified in the Annexure-III to the Distribution Code and any decree or order or judgment of the Court.*

*12.26 The insisting of completion certificate for the Multistoreyed Building and Special Building is as per the judgment of the Court rendered in W.P.No.18898 of 2000 and batch dt.23.8.2006."*

9.2 மேற்படி கூறிய பத்திகளின் ஆணையின்படி அடுக்குமாடிக் கட்டிடங்கள் மற்றும் சிறப்புக் கட்டிடங்களுக்கான நிறைவுச் சான்றிதழை வலியுறுத்துமாறு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கு அரசு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் பல மாடிக் கட்டிடங்கள் மற்றும் சிறப்புக் கட்டிடங்கள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன:

சிறப்பு கட்டிடம் என்றால்: தரை தளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட கட்டிடம்.
அடுக்குமாடி கட்டிடம்: நான்கு தளங்களுக்கு மேல் கொண்ட கட்டிடம்.

மேற்கூறிய ஆணையை செயல்படுத்த உரிமதாரருக்கு ஏற்கனவே வழங்கிய சுற்றறிக்கை எண். Memo No. CE/Comml/SE/Comml/EE3/AEE2/F.Plg.Per/D.175/2017, dt. 04.05.2017-இன் முக்கிய சரத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;

"xxxxx

5. In view of the above opinion for effecting service connections in the CMDA area, it is hereby further instructed as follows to implement the order of the Hon'ble High Court of Madras in WP No. 18898 of 2000 etc., batch in its order dated 23.08.2006:

(i) Insofar as the buildings having stilt + 4 floors or Ground + 3 floors (total 4 floors) and above, which are Speical and Multi-Storeyed buildings respectively, the instructions issued in memoranda under references (1) & (2) cited to insist Planning Permit and Completion Certificate for effecting electricity service connections shall be continued to be followed in its letter and spirit.

(ii) Insofar as the buildings having stilt + 3 floors or Ground + 2 floors or below, the intending consumer shall not be insisted to produce Planning Permit and Completion Certificate for effecting electricity service connections."

9.3 மேலும் சுற்றறிக்கையை செயல்படுத்துவதற்காக மீண்டும் வலியுறுத்தி வழங்கிய சுற்றறிக்கை எண். Memo No. CE/Comml/SE/Comml/EE3/AEE2/F.Plg.Per/D.139/2020, dt. 04.07.2020-இன் முக்கிய சரத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;

"xxxxx

6(e) In case of construction of building already in progress or construction completed, prior to 04.02.2019, in respect of Multistoried buildings (Stilt + 4 or Ground + 3 floors and above) alone in the CMDA area, the earlier instruction issued in Memo No. CE/Comml/SE/Comml/ EE3/AEE2/F.Plg.Per/D.175/2017, dt. 04.05.2017, requiring to comply with planning permission and Completion Certificate for effecting electricity service connetions, shall be continued to be followed."

ஆகவே, பல மாடிக் கட்டிடங்கள் மற்றும் சிறப்புக் கட்டிடங்கள் ஆகிவற்றிற்கு தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27-ல் கூறப்பட்டுள்ள பிற இணங்குகைளின் (Other Compliances) படி கட்டிட நிறைவு சான்றிதழ் பெற வேண்டும் என்பது உறுதியாகிறது.

10.0 <u>**வழக்கெழு வினா 3-ற்கான தீர்வு:**</u>

10.1 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர், தான் மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் கட்டிடமானது 2019-க்கு முன்னதாகவே அதாவது 2018-இல் கட்டப்பட்ட கட்டிடம் என்பதால் கட்டிட பணி நிறைவு சான்றிதழ் அவசியம் இல்லை என தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் விண்ணப்பம் பெறப்பட்டு ஆய்வு மேற்கொண்டபொழுது, ஏற்கனவே அந்த முகவரியில் இரண்டு மின்னிணைப்புகள்

பயன்பாட்டில் உள்ளதும், மேலும் அந்த முகவரியில் தரைதளம், முதல், இரண்டு, மற்றும் மூன்று தளங்கள் உள்ளதும் கண்டறியப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

10.2 தமிழ்நாடு பகிர்மான விதி எண்.27–இன்படி ஒரு மின் இணைப்பு வழங்குவதற்கு முன் ஆராயப்பட வேண்டிய சரத்துக்களில் பிற இணங்குகைகளைக் காட்டுகிற (other compliances) ஆவணங்களுடன் சேர்த்து பகிர்மான உரிமதாரரால் வேண்டுறுத்தப்படுகிறவாறு உரிய படிவத்திலுள்ளதும் அனைத்து வகைகளிலும் நிறைவான விண்ணப்பம் (application complete in all respects) எனப் பொருள்படுகிறது. சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், அடுக்குமாடி கட்டிடம் மற்றும் சிறப்பு கட்டிடம் ஆகியவற்றிற்கு நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட வரையறையை ஏற்றுக்கொண்டு வழங்கிய அரசாணை G.O.MS No.139, dt.15.10.2007–யின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வரம்பிற்குட்பட்ட பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

10.3 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி சிறப்பு கட்டிடம் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்களுக்கு (Special buildings & Multi storeyed buildings) மின்சார இணைப்பு வழங்குவதற்கு முன் கட்டிட நிறைவு சான்றிதழ் Completion Certificate அவசியம் என தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர், தான் மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும் கட்டிடமானது 2019–க்கு முன்னதாகவே அதாவது 2018–இல் கட்டப்பட்ட கட்டிடம் என்பதால் கட்டிட பணி நிறைவு சான்றிதழ் அவசியம் இல்லை என தெரிவித்துள்ளார். ஆனால், அக்காலகட்டத்தில் மெட்ராஸ் நீதிமன்றத்தால் WP No. 18898 of 2000 நாள் 23.08.2006 –ல் அளிக்கப்பட்ட ஆணை மற்றும் அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட அரசாணை G.O.MS No.139, dt.15.10.2007–யின்படியும் உரிமதாரரின் CE/Commercial அவர்களால் வழங்கப்பட்ட 04.05.2017 நாளிட்ட சுற்றறிக்கையானது நடைமுறைக்கு வந்துவிட்டது தெரியவருகிறது. அதன்படி, மேல்முறையீட்டாளரின் கட்டிடம் தரைதளம் மற்றம் மூன்று தளங்களுடன், சிறப்பு கட்டிடம் (special building) என்ற வரையறைக்குள் வருவதால் மேல்முறையீட்டாளர் கட்டிட பணி நிறைவு சான்றிதழ் வழங்கும்பட்சத்தில்தான் மின் இணைப்பு வழங்க இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது என தீர்வு செய்யப்படுகிறது.

**11.0 முடிவுரை:**

11.1 மேல்முறையீட்டாளரின் கட்டிடம் தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன், சிறப்பு கட்டிடம் (special building) என்ற வரையறைக்குள் வருவதால் மேல்முறையீட்டாளர் கட்டிட நிறைவு சான்றிதழ் வழங்கும்பட்சத்தில் மேல்முறையீட்டாளர் கோரும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

11.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 81/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திருமதி D. ஹேமலதா, – By RPAD
AP. 201, 10வது தெரு, 2வது செக்டர்,
கே.கே. நகர், சென்னை – 600 078.

2. மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

3. உதவி மின்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர்/கிழக்கு,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV SS, 50, ராமசாமி சாலை,
கே.கே. நகர், சென்னை – 78.

4. செயற்பொறியாளர் /இ&ப/ கே.கே.நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

**6.** செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் **– By email**
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**

**7.** உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**